
MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only




Printed Matter

## His Holiness
# POPE LEO XIV

**திருத்தந்தை. 14 ஆம் லியோ**

To


BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin
## Diocese of Marthandam
### மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



ஜூன்
29

## நல்லாயரே நாமவிழா நல்வாழ்த்துகள்

மலர் 21 ஜூன் 2025 இதழ் 6

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.06.2025 | Sunday | 8.00 am | Church Blessing | Mathias Nager |
| | | 5.00 pm | Renovated Church | |
| | | | Blessing | Mukadal |
| 05.06.2025 | Thursday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 06.06.2025 | Friday | 6.30 pm | Marthandam | |
| | | | Bible Convention | Kuzhithurai |
| 07.06.2025 | Saturday | 8.30 am | Class | Trivandrum |
| | | 6.00 pm | Marthandam | |
| | | | Bible Convention | Kuzhithurai |
| 08.06.2025 | Sunday | 6.00 pm | ,, | ,, |
| 09.06.2025 | Monday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 10.06.2025 | Tuesday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 11.06.2025 | Wednesday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 14.06.2025 | Saturday | 8.30 am | Church Feast | Christuvilagam |
| 15.06.2025 | Sunday | 8.30 am | Church Feast | Valiavilai |
| 16.06.2025 | Monday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 17.06.2025 | Tuesday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 18.06.2025 | Wednesday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 23.06.2025 | Monday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 24.06.2025 | Tuesday | 8.30 am | Class - Major Seminary | Trivandrum |
| 25.06.2025 | Wednesday | 8.30 am | Church Feast | Mathoorkonam |
| 28.06.2025 | Saturday | 8.30 am | Diocesan Day | Marthandam |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 ஜூன் 2025 இதழ். 6

***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*




மலர். 22 மே 2025 இதழ். 5

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam


மலர்.22 ஜூன் 2025 இதழ்.6

**முக்கியமான நாட்கள்**

ஜூன் 2025

- 01 உலக பால் தினம்
- 01 உலகளாவிய பெற்றோர் தினம்
- 03 உலக மிதிவண்டி தினம்
- 05 உலக சுற்றுச்சூழல் தினம்
- 07 உலக உணவு பாதுகாப்பு தினம்
- 12 உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்
- 14 உலக இரத்ததானம் செய்பவர்கள் தினம்
- 18 சர்வதேச சுற்றுலா தினம்
- 20 உலக அகதிகள் தினம்
- 21 சர்வதேச யோகா தினம்
- 21 உலக இசை தினம்

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | Circular | 03 |
| 2. | குருமட செய்திகள் | 06 |
| 3. | விவிய பணிக்குழு | 06 |
| 4. | மார்த்தாண்டம் மறைவட்டம் மேய்ப்புப் பணி அறிவுரைக் குழுவின் திருப்பயணம் | 07 |
| 5. | புது ஆலய அர்ச்சிப்பு | 08 |
| 6. | மறைபரப்புத் தளச்செய்திகள் | 09 |
| 7. | புதிய பணித்தள உருவாக்கம் | 10 |
| 8. | முனைவர் பட்டம் பெற்ற மறைமாவட்ட குருக்கள் | 11 |
| 9. | Transfers and Appointment of Priests 2025 | 12 |
| 10. | New Offices of Asst. Or Co-Priests 2025 | 13 |
| 11. | மேரி மக்கள் துறவற சபை | 15 |
| 12. | MIDS | 17 |
| 13. | மறைவட்ட செய்திகள் | 19 |
| 14. | MCA | 20 |
| 15. | திருமண ஆயத்தப்பயிற்சி | 21 |
| 16. | Hom - Special School for the Mentally Retarded | 22 |
| 17. | பெயர்விழா நல்வாழ்த்துக்கள் | 24 |
| 18. | ஆயரின் மே மாத நிகழ்வுகள் | 25 |
| 19. | இம்மாதம் நினைவு கூர | 27 |
| 20. | Bishop's Diary | 28 |



*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852




# DIOCESE OF MARTHANDAM


**Msgr. Jose Bright**
Vicar General

Bishop's House
Marthandam
K.K.District – 629 165


09 June, 2025

## வாருங்கள் மகிழ்ந்து கொண்டாடுவோம்

***பாசமிகு அருட்தந்தையர்களே, அருட்கன்னியர்களே, அருட் சகோதரர்களே, இறைமக்களே,***

மறைமாவட்ட வளர்ச்சிக்கு நீங்கள் யாவரும் அளித்துவரும் ஒத்துழைப்பிற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புமிக்கவர்களே ஒவ்வொரு வருடமும் ஜூன் திங்கள் 29-ம் நாள் அகில உலக கத்தோலிக்க திருஅவை, திருஅவையின் இருபெரும் தூண்களாகிய புனித பேதுரு, புனித பவுல் ஆகியோரின் திருவிழாவை கொண்டாடுகிறது. இவர்களின் புனித வாழ்வு இன்றும் திருஅவையின் புனித வாழ்விற்கு வழி காட்டுகிறது. இனி "வாழ்பவன் நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்" (கலா 2:20) என்ற இறைவார்த்தையை உண்மையாக வாழ்வாக்கி தன்னுடைய உயிரையே தியாகம் செய்தவர் புனித பவுல். இவர் திருஅவையின் மாபெரும் நற்செய்தி பணியாளர். கிறிஸ்து இயேசுவை அனுபவித்து கிறிஸ்து சாட்சியாக வாழ்ந்தவர். இம்மாபெரும் புனிதரை மறைமாவட்டத்தின் விண்ணக பாதுகாவலராக கொண்டிருக்கும் நாம் நமது மறைமாவட்ட தினவிழாவை கொண்டாடுகிறோம். அத்தோடு புனித பவுலின் பெயரை தன் பெயராக கொண்டிருக்கும் நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ்

அவர்களின் பெயர்கொண்ட திருவிழாவையும் கொண்டாடுகிறோம். இவ்விருவிழாக்களை சிறப்பாக கொண்டாடுவது மறைமாவட்ட மக்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள தன்னை வெறுமையாக்கி அளவிட முடியாத பெருமைகளை எல்லாம் எளிமையாக்கி பயணங்கள் பல சென்று இறைசமூகங்களை உருவாக்கி திருச்சபையின் வளர்ச்சியில் வளமையும் மகிழ்வும் கண்டு இறைவனின் விழுமியங்களை வாழ்வாக்கி மறைமாவட்ட மக்களுக்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்திருப்பவர் நம் ஆயர் அவர்கள். தானே முன்னின்று பயணங்கள் மேற்கொண்டு புதிய மறைபரப்பு பணித்தளங்களை உருவாக்க குருக்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் என அனைவரையும் ஊக்கப்படுத்தி வருகிறார். நம் மேதகு ஆயர் அவர்களின் பெயர்கொண்ட திருவிழா கொண்டாடும் இவ்வேளையில் ஆயர் அவர்களை வாழ்த்தவும் அவருக்காக ஜெபிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இத்திருவிழாக்களை கொண்டாடும் தருணத்தில் நமது நற்செய்தி அறிவிப்பு பணிகளை ஊக்குவிக்கவும் நாம், நற்செய்தி பணியாளர்களாக நம்மை உருவாக்கவும் முயற்சிப்போம். இவ்வருடம் சேகரிக்கப்படும் நிதி உயர்கல்விக்கு உதவியாக வழங்கப்படும்.

நமது பேராலயத்தில் வைத்து நடைபெற உள்ள மறைமாவட்ட தினவிழாவில் மாவேலிக்கரை ஆயர் மேதகு ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள். இவ்விழாவைத் தொடர்ந்து குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்ட மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலைய அர்ச்சிப்பும் நடைபெறும். இந்த அர்ச்சிப்பு



திருச்சடங்கில் மறைமாவட்ட குருக்கள், மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைகுழு உறுப்பினர்கள், அருட்கன்னியர்களின் பிரதிநிதிகள், பங்கு செயலர் மற்றும் பொருளர் பங்கேற்று சிறப்பிக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாண்டு மறைமாவட்ட தினவிழா மற்றும் பெயர்கொண்ட திருவிழா நிகழ்வுகள் பின்வருமாறு நடைபெறும்.

**28 ஜூன் 2025 – சனிக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | **காலை ஜெபம் - பேராலயம்** |
| காலை 6.45 மணி | : | **ஆயர்களுக்கு வரவேற்பு** |
| காலை 7.00 மணி | : | **திருப்பலி** |
| காலை 09.00 மணி | : | **வாழ்த்துக்கூட்டம்** |
| | : | **நிதி உதவி சமர்ப்பணம்** (பங்குமக்கள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனிநபர்கள்) |
| காலை 09.30 மணி | : | **காலை உணவு** |
| காலை 11.00 மணி | : | **மேய்ப்பு பணி நிலையம் அர்ச்சிப்பு மார் எப்ரேம் வளாகம் - குழித்துறை** |
| மதியம் 12.30 மணி | : | **மதிய உணவு** |

***இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.***

*இயேசுவில் அன்புடன்,*

**மோண். ஜோஸ் பிரைட்**
குருகுல முதல்வர்

# குருமட செய்திகள்

- ஞாயிற்றுக்கிழமைகளில் பங்களவிலும் மறைவட்ட அளவிலுமாக இறைஅழைத்தல் முகாமானது அருட்சகோதரர்களால் நடத்தப் பட்டது.
- மே மாதம் 1 மற்றும் 2 தேதிகளில் அருட்சகோதரர்கள் MBOC முகாமினை தலைமையேற்று நடத்தினாற்கள்.
- மேய் மாதம் 27-ஆம் தேதி அன்று கடந்த வருடம் களப்பணி சிறப்புற நிறைவேற்றிய அரட்சகோதரர்களுக்கு குருத்துவ ஆடை வழங்குதலும் இளந்நிலை பட்டஙகளும் நம்மறைமாவட்ட ஆயரின் திருக்கரங்களினால் வழங்கப்பட்டது.
- மேய் மாதம் 27-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை புதிதாக குருமடத்தில் சேர இருக்கின்ற மாணவர்களுக்கான தியானமானது அருட்தந்தை ஐவின் ஆன்றோ அவர்களால் இளம்குருமடத்தில் வைத்து நடத்தப்பட்டது. 29-ஆம் தேதியன்று ஆயர் அவர்கள் சந்தித்து அவர்களோடு கலந்துரையாடினார்.

# விவிலிய பணிக்குழு

மே மாதம் 12-ஆம் தேதி மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை ஆயர் இல்லத்தில் வைத்து விவிலிய பணிக்குழுவின் கூடுகை குருகுல முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்ட விவிலிய பணிக்குழு இயக்குனர் தந்தையர்களும் அருட்சகோதரி ஊக்குநர்களும் பொதுநிலையினரின் ஊக்குனர்களும் கலந்து கொண்டார்கள். இறைவார்த்தை ஆண்டில் இதுவரை செய்த செயல்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.



# மார்த்தாண்டம் மறைமாவட்டம்
## மேய்ப்புப் பணி அறிவுரைக் குழுவின் திருப்பயணம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்புப் பணி அறிவுரைக் குழுவின் திருப்பயணம் 28.05. 2025 புதன்கிழமை மறைமாவட்ட மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் காலை 5.30 மணிக்கு புறப்பட்டது. 5 அருட்தந்தையர்கள் 2 அருட்சகோதரிகள், 20 மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். முதலாவதாக, அருட்தந்தை பென்னட், திருமதி விமலா, கீதா, திரு. ரகுபதி, திரு. சிவஜாண் மற்றும் நல்லநாதபுரம் மறைபரப்புதளத்தில் அங்குள்ள இறைமக்களுடன் உரையாடலும் நடைபெற்றது. பின்னர் அருகில் உள்ள J.J. நகர் பகுதியில் புதிதாக மறைபரப்பு தளம் தொடங்க இடம் வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இடம் பார்வையிடப்பட்டது. மறைபரப்பு தள இடத்தில் உள்ள மக்கள் எங்களுடன் அன்பாக பேசி கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு வாழும் வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளும் உற்சாகமும் காணப்பட்டது. தொடர்ந்து விருதுநகர் பக்கம் T. கல்லுப்பட்டி, வேலாம்பூர் பகுதியில் உள்ள மறைபரப்பு தளத்தில் MIDS சுய உதவிக் குழுக்கள் தொடங்குவதற்காகவும், அருட்தந்தையர்கள் தங்கி மறைபரப்பு பணி செய்வதற்காகவும். புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடம் பார்வையிடப்பட்டது. மேதகு ஆயர் அவர்கள், அந்த இடத்தில் தொடங்க இருக்கும் பணிகள் குறித்து விளக்கமாக தெரிவித்தார்கள். தொடர்ந்து தேவதானபட்டி மறைபரப்புத்தளம் பார்வையிடும்போது ஏராளம் குழந்தைகள், இளைஞர்கள், தாய்மார்கள் வருகை தந்து அன்புடன் உரையாடினார்கள். மறைபரப்பு தளம் தொடங்கும்போது இருந்த நிலைமைகள் தற்போதுள்ள வளர்ச்சி நிலைகள் குறித்து

திரு. ராமைய்யன் அவர்கள் தெளிவாக மகிழ்ச்சியுடன் எடுத்து கூறினார்கள். Sr. மரிய ஜோசப், Sr. செலின், அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ அவர்களின் சிறப்பான வழிநடத்துதல்கள் குறித்தும், தங்களின் தேவைகள் குறித்தும் தெரிவித்தார்கள். தொடர்ந்து பயணத்தின்போது மேதகு ஆயர் அவர்கள் புதிய திருத்தந்தை, 14-ம் லியோ அவர்களின் தேர்வு தூய ஆவியாரின் வழிநடத்துதல், திருத்தந்தை தேர்வு முறைகள், கத்தோலிக்க சபையின் கட்டுப்பாடுகள் குறித்து தெளிவாக விளக்க உரை நிகழ்த்தினார்கள். அனைவரும் வாடிப்பட்டி திருத்தலத்தில் இறைவேண்டல் செய்தனர். வருகை தந்த அனைவருக்கும் மேய்ப்புப் பணி அறிவுரைக் குழு செயலர் திரு. M. அருள்தாஸ் நன்றி கூற, அனைவரின் ஜெபத்துடன் திருப்பயணம் நிறைவுபெற்றது.

## புது ஆலய அர்ச்சிப்பு

நாகர்கோவில் மறைவட்ட தேவாலயங்களான அன்னை வேளிங்கன்னி மாதா ஆலயம், மத்தியாஸ் நகர் மற்றும் புனித பெனடிக்ட் ஆலயம், முக்கடல் ஆகியவற்றின் புனரமைப்பு பணிகள் செவ்வனே நிறைவுற்று, 01.06.2025 அன்று, மேதகு ஆயர் வின்சன்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் திருக்கரங்களினால் அர்ச்சிக்கப்பட்டது. இவ்விரு ஆலயங்களும் இன்று நாகர்கோவில் மறைவட்டத்தின் பெருமையை மேலும் சிறப்பிக்க செய்வதும், ஆன்மீக ஒளியை அழகுற வீசுவதுமாக உள்ளன. இதனுடன் முக்கடல் ஆலய வளாக புதிய குருசடி மற்றும் சிலுவைப் பாதையின் பதிநான்கு நிலைகள் ஆன்மீக ஒளியில் நனையச் செய்வதாக விளங்குகின்றன.



# மறைபரப்புத் தளச்செய்திகள்

### தேவதானப்பட்டி மறைபரப்புத் தளம்

* தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலயம், தேவதானப்பட்டியில் 19, 20, 21 ஆகிய மூன்று நாட்கள் MBOC வகுப்புகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அருட்சகோ அபிலாஷ் அவர்கள் MBOC வகுப்புகளை வழிநடத்தினார்கள்.
* மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு உறுப்பினர்கள் தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலயம் தேவதானப்பட்டியை 28.05.2025 அன்று சந்தித்தார்.
* மாணவர்கள் கல்வியில் சரியான பாதையை தேர்வு செய்து இலட்சியத்தை அடைவதற்கு துணை புரியும் வண்ணம் தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் ஒருநாள் முகாம் Carrier Guidance முகாம் பேராசிரியை மேரி சுபா அவர்களால் வழிநடத்தப்பட்டது.
* தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலய தாய்மார் சங்க உறுப்பினர்களுக்கு மருத்துவ விழிப்புணர்வு முகாம் வத்தலகுண்டு அரசு பருத்துவமனை செவிலியர்களால் வழங்கப்பட்டது.

# புதிய பணித்தள உருவாக்கம்

மார்த்தாண்ட மறைமாவட்ட கொல்லங்கோடு மறைவட்டத் திற்குட்பட்ட புன்னமூட்டுக்கடை என்னும் இடத்தில் புன்னமூட்டுக்கடையை சுற்றி வாழக்கூடிய மக்களுடைய ஆன்மீக கோரிக்கையை முன் கண்டு மார்த்தாண்டம் மறைமாவட்டம் மே மாதம் 29 -ம் தேதி ஆண்டவருடைய விண்ணேற்ற திருநாளையொட்டி அவ்விடத்தில் மக்கள் ஆண்டவரை வழிபடுவதற்கு இணைந்துவர வசதியாக அன்னை வேளாங்கண்ணி மலங்கரை கத்தோலிக்க ஆலயம் புன்னமூட்டுக்கடையில் நிறுவி தெய்வீக திருப்பலி நிறைவேற்றும் ஆணை கொடுக்கப்பட்டதையொட்டி அன்றைய நாள் மாலை 6 மணிக்கு அந்த இடத்தை மறைமாவட்டத்திற்கு தானமாக தந்த தாத்தா ஹார்வி டென்னிஸ் அவர்களுடைய கல்லறையில் வைத்து தூப மன்றாட்டு ஜெபத்தோடு மாலை ஜெபம் அதைதொடர்ந்து முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

திருப்பலி முடிந்து மக்களை சந்தித்து தலைமையுரை யாற்றி ஆசீர்வதிக்க கொல்லங்கோடு மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் வருகை தந்தார்கள்.

திருப்பலி வழியாக மக்களை ஆசீர்வதித்தவர் பங்குத்தந்தை அருட்தந்தை ஜீவன் ஜார்ஜ் அவர்கள்.

அன்றைய நாள் அவ்விடத்தில் வாழும் மக்கள் அனைவரும் இணைந்து திருப்பலியை சிறப்பித்தார்கள். தொடர்ந்து அவ்விடத்திலே திருப்பலி நிறைவேற்றப்பட்டு வருகிறது. நன்றி



# முனைவர் பட்டம் பெற்ற மறைமாவட்ட குருக்கள்

நமது மறைமாவட்டத்தை சார்ந்த இரண்டு குருக்கள் முனைவர் பட்டத்தை பெற்றுக்கொண்டார்கள்.

அருட்தந்தை டார்பெல்லோ கிறிஸ்டஸ் அவர்கள் மே மாதம் 15-ம் தேதி ரோமிலுள்ள போன்றிபிக்கல் கிரிகோரியன்



பல்கலைக்கழகத்தி லிருந்து விவிலியத்தில் இந்த தலைப்பில் Tina Zeteite? (Jn 18,4.7) An Exegetico-Theological Significance of 'Seeking' in the Gospel of John தன்னுடைய முனைவர் பட்டத்தை பெற்றுக்கொண்டார்.



அருட்தந்தை ஸ்டீபன் மாத்தார் அவர்கள் மே மாதம் 16-ம் தேதி ரோமிலுள்ள போன்பிக்கல் சலேஷியன் பல்கலைக் கழகத்திலிருந்து சமூகதொடர்பியலில் இந்த தலைப்பில் "Media and the family, in the documents of the Catholic Church from 2000 to 2023, based on literature reviews, relevant theories and focus group research" தன்னுடைய முனைவர் பட்டத்தை பெற்றுக்கொண்டார். இரண்டு அருட்தந்தையர் களுக்கும் மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

## Transfers and Appointments of Priests 2025
## Marthandam Diocese

| No. | Name | Parish Priest |
|---|---|---|
| 1. | **Msgr. Jose Bright** | Kuzhithurai |
| 2. | **Fr. Sibi** | Elavuvilai Mission |
| 3. | **Fr. Michael Mukkampalth** | George Nagar |
| 4. | **Fr. Devadas** | Kulapparai |
| 5. | **Fr. Bernard** | Ambilikonam, Kaduvakuzhi |
| 6. | **Fr. John Kumar** | Aralkumarapuram |
| 7. | **Fr. Jose Marthandam** | Kidarakuzhi |
| 8. | **Fr. Bennet** | Nallanadapuram, JJ Nagar |
| 9. | **Fr. Yesudas Fathimanagar** | Chellamkonam, Punkarai |
| 10. | **Fr. Darbello Christus** | Vettukuzhi |
| 11. | **Fr. Robert** | Mandaramputhoor, James Town |
| 12. | **Fr. Sajith Francis** | Christhuvilakam, Beach Road |
| 13. | **Fr. Sajeev Pilankala** | Urampuvilai |
| 14. | **Fr. Jose Paravilai** | Chekkittuvilai |
| 15. | **Fr. Ajeesh Kumar** | Konam |
| 16. | **Fr. Abinson Alex** | Aloor |
| 17. | **Fr. Jeevin George** | Punnamootukkadai |
| 18. | **Fr. John Shibu** | Pushpagiri, Pallukuzhi |
| 19. | **Fr. Ratheesh Richard** | Mukkadal, Navelkadu, Boothappandy, Mathiasnager |
| 20. | **Fr. Jebin John** | Thirunelvel, Kallikulam |
| 21. | **Fr. Bibin** | Mukkampalai, Anbunagar |
| 22. | **Fr. Sunish Kumar** | Thenikulam, Gnanadasapuram |
| 23. | **Fr. Vibins Wilson** | Vimalapuram, Cherotukonam |
| 24. | **Fr. Anish** | Trichy |
| 25. | **Fr. Ajesh** | Kattuvili, Alwarcoil |
| 26. | **Fr. Siljin** | Annakarai, Muthalar |



## New Offices of Asst. Or Co-Priests 2025
## Marthandam Diocese

| No. | Name | Office/Asst. Or Co-Parish Priest |
|---|---|---|
| 1. | **Fr. Sibi** | Rector-Minor Seminary |
| 2. | **Fr. Peter Benadict Rajan** | Manager-Estate - Mukkampali |
| 3. | **Fr. Michael Mukkampalth** | Director-Priest Home |
| 4. | **Fr. Franklin Jose** | Secretary Cum Correspondent - MCC Mariagiri |
| 5. | **Fr. Darbello Christus** | Malankarai Major Seminary Director-Malankarai School of Word and Worship |
| 6. | **Fr. Robert** | Director-Mercy Home |
| 7. | **Fr. John Shibu** | Director-Santhom Press |
| 8. | **Fr. Anto Jebin** | Director-Retreat Centre and Suvishesasankam |
| 9. | **Fr. Jebin John** | Studies-MA |
| 10. | **Fr. Vibins Wilson** | Secretary-Liturgical Commission |

| No. | Name | Office/Asst. Or Co-Parish Priest |
|---|---|---|
| 11. | **Fr. Anish Johan** | Studies-MTh |
| 12. | **Fr. Siljin** | Correspondent- Mary Mount CBSE School, Anakarai and Director MCCL |
| 13. | **Fr. Abishek Raj** | Co. Parish Priest - Panachamoodu |
| 14. | **Fr. Rejin** | Asst. Parish Priest - Bhoothapandy |
| 15. | **Fr. Ajin Alocious** | Asst. Parish Priest - Devadanappatti |
| 16. | **Fr. Maria Popul Revin** | Asst. Parish Priest - Kirathoor, Director CSL |
| 17. | **Fr. Jerome Godwin** | Asst. Parish Priest - Mathar |
| 18. | **Fr. Sabin** | Asst. Parish Priest - Erachakulam |
| 19. | **Fr. Robin** | Asst. Parish Priest - Cheruppaloor |
| 20. | **Fr. Paulson** | Asst. Parish Priest - Marthandam |
| 21. | **Fr. Ivin Anto** | Secretary to Bishop |
| 22. | **Fr. Justin Nullikkadu** | Ministry-Edmonton -Canada |
| 23. | **Fr. Hebin** | Ministy-Toronto-Canada |
| 24. | **Fr. Rejin Ratheesh** | Studies-Biblical Theology-Rome |
| 25. | **Fr. Ajeesh Johan** | Studies-Liturgy - Rome |
| 26. | **Fr. Wilfin Viju** | Studies-Canon Law-Kottayam |
| 27. | **Fr. Jenito** | Studies-MA - Chennai |



# மேரி மக்கள் துறவற சபை

**பவளவிழா பொன்விழா மற்றும் வெள்ளிவிழா துவக்கம்**

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் துறவற வாழ்வில் 75, 50, 25 ஆண்டுகள் பயணித்ததன் பவளவிழா, பொன்விழா, வெள்ளிவிழா காணும் அருட்சகோதரிகள் :

**பவளவிழா**

Sr. மெர்சி DM

**பொன்விழா**

Sr. லில்லி ஜோஸ் DM, Sr. லிசா மேரி DM

**வெள்ளிவிழா**

Sr. ஜெனட் மேரி DM, Sr. ஜோ மேரி DM, Sr. நீற்றா கிரேஸ் DM, Sr. சலோமி ஜோஸ் DM, Sr. ஸீனா பீட்டர் DM, Sr. ஸ்டெல்லா ராணி DM, Sr. ஜெயின் மேரி DM இவர்களின் ஜூபிலி துவக்க நிகழ்வானது எம் தாய் இல்லத்தின் சிற்றாலத்தில் வைத்து மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருப்பலியுடன் மே மாதம் 8-ம் தேதி காலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அனைத்து அருட் சகோதரிகளுக்கும் பவளவிழா, பொன்விழா, வெள்ளிவிழா வாழ்த்துக்கள்.

**முதல் மற்றும் நித்திய வார்த்தை பாடு நிகழ்வு**

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் முதல் மற்றும் நித்திய வார்த்தைபாடு நிகழ்வுகள் மே மாதம் 9-ம் தேதி எம் தாய் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைத்து மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் முதல் வார்த்தைபாட்டை Sr. கார்மலினா DM, Sr. நிர்மலா DM, Sr. பிரான்சிஸ்கா DM என்னும் அருட்சகோதரிகளும் Sr. சகாய மேரி DM, Sr. அல்பினா DM, Sr. ஜெய டோன் போஸ்கோ DM ஆகியோர் நித்திய வார்த்தைபாட்டையும் செய்து இறைவனுக்கு தங்களையே அர்ப்பணம் ஆக்கினார்கள். அனைத்து அருட்சகோதரிகளுக்கும் வாழ்த்துக்கள். இதில் ஏராளமான அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

### மாகாண தின நிகழ்வு

சூசையப்பர் மாகாண பாதுகாவலரான புனித சூசையப்பரின் தினமான மே ஒன்றாம் தேதி மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் காலையில் மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் திருப்பலியும் சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றது.

### புதிய மறைபரப்பு தளத்தில் துறவற சபை அர்ச்சித்தல்

கட்கி பூனே மறைமாவட்டத்தின் சார்பாக ஆந்திர மாநிலத்தில் ஓண்கோள் என்னுமிடத்தில் ஒரு மறைபரப்பு தளம் தொடங்கப்பட்டது. அதில் மேரி மக்கள் துறவற சபையின் குறிப்பாக சூசையப்பர் மாகாணத்தின் சார்பாக மறைபரப்பு பணி செய்கிறார்கள். அவர்களுக்காக ஒரு துறவற இல்லம் கட்டப்பட்டது. 2025 மே 17-ம் தேதி அன்று மேதகு ஆயர் மேத்யூஸ் மார் பக்கோமியோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் துறவற இல்லம் அர்ச்சிக்கப்பட்டது. இதில் அருட்தந்தையர்கள், மார்த்தாண்டம் மாகாண தலைவி மதர் ரோஸ் பிரான்சிஸ், அருள் சகோதரிகள் மற்றும் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டார்கள்.

### முனைவர் பட்டம்



மேரி மக்கள் கன்னியார் சமூகத்தின் செயிண்ட் ஜோசப் மாகாணத்தைச் சேர்ந்த அருட்சகோதரி ஹன்னா DM, அவர்கள் மே மாதம் 20-ஆம் தேதி ரோமில் உள்ள மரியனாம் பல்கலைக்கழகத்தில் தனது Ph.D. படிப்பை வெற்றிகரமாக முடித்து, முனைவர் பட்டத்தை "The Marian Spirituality for the Kingdom of God in the Missionary Context of the Congregation of the Daughters of Mary" இந்த தலைப்பில் பெற்றுக்கொண்டார். அருட்சகோதரி அவர்களுக்கு வாழ்த்துக்கள்.



## மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### வழிகாட்டுதல் பயிற்சி

தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக 10-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 22.04.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்தார்கள். திரு. ஆன்றோ சேவியர் அவர்கள் பயிற்சியினை நடத்தினார்கள். உயர் கல்வி பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான வேலைவாய்ப்புகள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் அதிக மதிப்பெண்கள் பெறவும், இலக்குகளை அடையவும் என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டும், எவ்வாறு படிக்கவேண்டும் என்றும் பயிற்சியளிக்கப்பட்டது. உயர் கல்வி குறித்த மாணவர்களின் சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்பட்டன. காலை 10 மணி முதல் மாலை 3 மணிவரை நடைபெற்ற இந்த பயிற்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் அமைந்ததாக கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 54 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### ஊக்கப்படுத்துதல் பயிற்சி

03.05.2025 அன்று 9 மற்றும் 11-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான ஊக்கப்படுத்துதல் பயிற்சி மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை மிட்ஸ் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்கள் துவங்கி வைத்தார்கள். பயிற்சியினை அருட்தந்தை ஜெயசீலன் அவர்கள் நடத்தினார்கள். பயிற்சியில் உசுப்புதல், உயிர் கொடுத்தல், உழைப்பு, என்ற மூன்று தாரக மந்திரங்கள் மற்றும் உடல் சார்ந்த வளர்ச்சி, உண்மை சார்ந்த வளர்ச்சி, உன்னை சார்ந்த வளர்ச்சி என்ற மூன்று நகர்வுகள் குறித்து மாணவர்களுக்கு பயிற்றுவித்தார்கள். மேலும், கல்வியின் முக்கியத்துவம், வேலைவாய்ப்பை வழங்கும் பாடத்திட்டங்கள்,

படிக்கும் வழிமுறைகள், இலக்குகளை அடைய செய்யவேண்டிய செயல்பாடுகள் மற்றும் பலவகையான செய்திகள் மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. மேலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு விதமான விளையாட்டுகள் பயிற்சியின் இடையே நடத்தப்பட்டன. காலை 10 மணி முதல் மாலை 3.30 மணிவரை நடைபெற்ற இப்பயிற்சியில் 49 மாணவமாணவிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

**உதவித்திட்டங்கள்**

1. 22.04.2025 அன்று மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உறுப்பினராக இருந்து இறந்துபோன மூன்று உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 37,500/- இறப்பு நிதியாக வழங்கப்பட்டது.

2. 25.04.2025 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணிமண்டலத்தின் 8 சுய உதவி குழுக்களில் உள்ள 32 உறுப்பினர்களுக்கு ரூபாய் 16,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

**பிறநிகழ்வுகள்**

1. 24.04.2025 அன்று விண்ணைத்தொடு திட்டம் சார்பாக சிதறால் மற்றும் மாத்தூர்கோணம் பங்குகளை, CRS அலுவலகத்தி லிருந்து வருகை தந்த அருட்தந்தை செலஸ்டின் மற்றும் செல்வி சஞ்சனா ஆகியோர் சந்தித்து பொறுப்பாளர்கள் மாற்றம் குறித்து ஆலோசனை செய்தனர்.

2. 02.05.2025 அன்று மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தில் உள்ள பயனாளிகளுக்கு இன்ப சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி அன்றைய தினம் காலை 8 மணிக்கு புறப்பட்டு திருவனந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள பிளானட்டோரியம், மிருககாட்சி சாலை மற்றும் சங்குமுகம் கடற்கரை ஆகிய பகுதிகளை கண்டுகளித்த பின்மாலை 6 மணிக்கு வீடு திரும்பினர். இந்த சுற்றுலாவில் 95 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

3. 12.05.2025 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் 2025-'26-ம் ஆண்டுக்கான Review Meeting மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. CRS பணியாளர்களான திருமதி ஜோமி மற்றும் செல்வி சஞ்சனா ஆகியோர் கூட்டத்தினை வழிநடத்தினர். இந்த கூட்டத்தில் Transition, Gate Keeping System ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் நான்கு மறைமாவட்டங்களிலும் உள்ள விண்ணைத்தொடு திட்ட பயனாளிகள் 30 பேர் கலந்துகொண்டனர்.

4. 13.05.2025 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் 202526 -ம் ஆண்டிற்கான திட்டமிடுதல் கூட்டம் கல்லுவிளை, கன்னியாகுமரி சமூக சேவை மையத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் கலந்துகொண்டார்கள்.



# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

**மாதாந்திர தியானம் மற்றும் குருக்களுக்கான கூடுகை**

நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் மாதாந்திர கூடுகை மற்றும் மேய் மாத தியானமானது 26.05.2025 அன்று கிறிஸ்துவிளாகம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியான உரையை, 'குருத்துவ வாழ்வில் வேரூன்றுதல்' என்ற தலைப்பில் அருட்தந்தை ரெதீஷ் ரிச்சார்ட் அவர்கள் வழங்கினார்கள். தொடர்ந்து மறைவட்ட குருக்களின் பணிப்பொறுப்புகளின் அனுபவ பகிர்வு மற்றும் மறைமாவட்ட பொது அறிவிப்புகள் வழங்கப்பட்டு கூடுகை இனிதே நிறைவுற்றது.

## பனச்சமூடு மறைவட்டம்

**மாதாந்திர தியானம் மற்றும் குருக்களுக்கான கூடுகை**

பனச்சமூடு மறைவட்ட குருக்களின் மாதாந்திர கூடுகை மற்றும் மேய் மாத தியானமானது 13.05.2025 அன்று பனச்சமூடு, புனித சூசையப்பர் தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது.

# MCA
## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA-சார்பில் 8, 9 மே 2025 தேதிகளில் Mar Ivanios CBSE School குழித்துறையில் வைத்து "Ignite Talent Exploration Programme" ஆனது 10, 11, 12 மற்றும் Degree முதலாமாண்டு மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. இதில் சுமார் 40 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதில் நமது பிள்ளைகள் உயர் நிலையில் உள்ள அரசு வேலைகளை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பதை மையப்படுத்தி அதற்கு அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் வருப்புகள் நடத்தப்பட்டன.

### பொதுநிலையினர் சங்கமம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவின் சார்பில் வின்சென்ட்-டி-பவுல் சங்கம், மரியாயின் சேனை, தாய்மார் சங்கம், தந்தையர் சங்கம் மற்றும் மலங்கரை கத்தோலிக்க இயக்கம் ஆகியவை இணைந்து 31-05-2025 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மார் எப்ஃரேம் வளாகம், குழித்துறையில் வைத்து மேதகு ஆயரின் தலைமையில் நடைபெற்றது. மாத்தார்கோணம் பங்கு தாய்மார்கள் இறைவணக்கம் பாட திருமதி பசலி, கிராத்தூர் விவிலியம் வாசிக்க, திரு. ஏசுராஜ் வின்சென்ட் தே-பவுல் சங்கம் அவர்களால் அனைவரையும் வரவேற்கப்பட்டது. மேதகு ஆயர், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் இயக்கங்களின் பிரதிநிதிகளால் குத்துவிளக்கு ஒளியேற்றப்பட்டது. ஆயர் அவர்கள் துவக்கவுரையாற்ற Dr. ஹெர்லின் அவர்களால் கருத்துரை வழங்கப்பட்டது. மோண். ஜோஸ் பிறைட் மற்றும் மதர் றோஸ் பிரான்சீஸ் ஆகியோர்களால் ஆசியுரை வழங்கப்பட்டது. சாதனையாளர்களால் திரு. ராஜப்பன், செல்லங்கோணம், திருமதி மேரி சுபா ஆகியோர்களுக்கு சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டது. மாநில மற்றும் மத்திய அரசு பாடதிட்டத்தில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற தலா இரண்டு மாணவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கேடயமும் வழங்கப்பட்டது. Ignite - 2025 மற்றும் Light - 2025-ல் கலந்துகொண்ட மாணவன் செல்வன் ஆட்லின்ராஜ், சிதறால் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். சாதனையாளர்களை திரு. பால்ராஜ் அவர்கள் அறிமுகம் செய்தார். இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்கள் சங்கம ஏற்பாடுகள் தொடர்பாக பேசி அனைவருக்கும் நன்றி கூறினார். பொதுநிலையினர் பணிக்குழு உறுப்பினர் திரு. அருள்தாஸ் முறைப்படி நன்றி கூறினார். பொதுநிலையினர் சங்க நிகழ்வுகள் அனைவருக்கும் உத்வேகத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இயக்கங்களின் பொறுப்பாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பொதுநிலையினர் பணிக்குழு செயலர் திரு. வர்க்கீஸ் அவர்களது தலைமையில் அனைவரும் இணைந்து செய்யப்பட்டது.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 ஜுன்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **20, 21** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

### ஹோம் சிறப்பு பள்ளி ஆண்டுவிழா

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் சுகாதாரப் பணி மையமான ஹோம் அமைப்பின் முதன்மைப் பணிகளில் ஒன்றே ஹோம் அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்பு பள்ளி. இச்சிறப்புப் பள்ளியின் 26-வது ஆண்டு விழாவும், நிறுவனர் தினவிழாவும் 05.04.2025 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் மார் எப்ரேம் அரங்கில் வைத்து நடைபெற்றது. சிறப்பு குழந்தைகள் பேண்ட் வாத்தியம் இசைத்து சிறப்பு விருந்தினர்களை வரவேற்றார்கள். முன்னதாக நாகர்கோவில், குரியன் ஆபிரகாம் பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் சி.எஸ்.ஆர் திட்டத்தின்கீழ் குக்கிராமங்களிலிருந்து வருகை தரும் சிறப்பு குழந்தைகளை பயிற்சி பெற அழைத்து வர பள்ளி வாகனம் ஒன்று அன்பளிப்பாக வழங்கினார்கள். அவ்வாகனத்தை இயக்குநர் திரு. பிரவின் மேத்யூ மற்றும் நாகர்கோவில், கானம் லேட்டக்ஸ் பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் இயக்குநர் திருமதி ரெபேக்கா ரெவி ஜாய் ஆகியோர் இணைந்து ஆயரிடம் வழங்கினார்கள். ஆயர் அவர்கள் அர்ச்சித்து கொடியசைத்து பயன்பாட்டிற்காக இயக்கி வைத்தார்கள். தொடர்ந்து ஹோம் நிறுவனர் விண்ணில் வாழும் ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகைக்கு அனைவரும் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

ஹோம் சிறப்பு பள்ளியின் இயக்குநர்/தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் அறிமுக உரையோடு அனைவரையும் வரவேற்றார்கள். ஹோம் சிறப்பு பள்ளியின் முன்னாள் இயக்குநர் / தாளாளர் பேரருட்தந்தை மரிய அற்புதம் அவர்கள் நினைவுரை யாற்றினார்கள். சிறப்பு பள்ளியின் தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் சிறப்பு பள்ளியின் ஓராண்டு கால நிகழ்வுகளை அறிக்கையாக சமர்ப்பித்தார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயரும் ஹோம் இயக்கத்தின் மேலாளருமாகிய மேதகு ஆயர். வின்செென்ட் மார் பவுலோஸ் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார்கள். அவர் தம் தலைமையுரையில் சிறப்பு பள்ளியின் செயல்பாடுகளையும் தற்போது வரை அது கண்டுள்ள வளர்ச்சிகளையும் எடுத்துக் கூறினார்கள். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கன்னியாகுமரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. தினேஷ் சந்திரன் அவர்களும் ரெத்னா நினைவு மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர். மகிழன் அவர்ளும் ஸ்ரீ தேவி குமாரி மகளிர் கல்லூரியின் முதல்வர் முனைவர் பிந்துஜா அவர்களும் சுவாமியார்மடம் ரெத்னா நினைவு மருத்துவமனை இயக்குநர் டாக்டர். சாந்தி அவர்களும், மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெரோம் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். ஸ்ரீ தேவி குமாரி மகளிர் கல்லூரியின் வணிகவியல் மூன்றாமாண்டு மாணவி செல்வி. சோபிதா அவர்கள் தமது கல்லூரியில் சிறப்பு குழந்தைகளின் ஒரு நாள் கல்லூரி வாழ்க்கை குறித்த தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவி திருமதி. அமுதா அவர்கள் தமது உரையில் ஹோம் சிறப்பு பள்ளியின் மூலம் சிறப்பு குழந்தைகள் அடைந்துள்ள முன்னேற்றங்களை குறித்து பேசினார்கள்.

சிறப்பு குழந்தைகள் மேற்கத்திய நடனம், நாட்டுப்புற நடனம், பாடல், இசை சிற்பம் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தினார்கள். மார்த்தாண்டம் இன்பெண்ட் நடனப்பள்ளி இயக்குநர் மாஸ்டர் அருள் அவர்கள் மிக சிறப்பாக பயிற்சி வழங்கியிருந்தார்கள். நடைபெற்ற நிகழ்வுகளில் அனைத்து சிறப்பு குழந்தைகளும் கலந்து கொண்டது மிகவும் சிறப்புக்குரியது. சிறப்பு விருந்தினர்கள், குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி மகிழ்ந்தார்கள். சிறப்பாசிரியை திருமதி அஜிதா குமாரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். தன்னார்வலர் திருமிகு அலோசியஸ் அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் தொகுத்து வழங்கினார்கள். இறுதியாக சிறப்பாசிரியர்கள் நாட்டுப்பண் பாடினார்கள். இந்நிகழ்வில் சிறப்பு குழந்தைகள், பெற்றோர்கள், இதர சிறப்பு பள்ளி பிரதிநிதிகள், உபகாரிகள், பணியாளர்கள் மற்றும் ஹோம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் என 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை
ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை
ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை
ரெஜின் ரெதீஷ்
ஜூன் 09



அருட்தந்தை
சுரேஷ் ஆன்றனி
ஜூன் 13



அருட்தந்தை
ஆன்றோ ஜெபின்
ஜூன் 13



அருட்தந்தை
சில்ஜின்
ஜூன் 13



அருட்தந்தை
அபிஷேக் ராஜ்
ஜூன் 13



அருட்தந்தை
ஜவின் ஆன்றோ
ஜூன் 13



அருட்தந்தை
ரெஜின் ராஜ்
ஜூன் 13



அருட்தந்தை
அஜின் அலோஷியஸ்
ஜூன் 21



அருட்தந்தை
ஜோணி ஆல்பர்ட்
ஜூன் 24



அருட்தந்தை
ஜோசப் பத்றோஸ்
ஜூன் 29



அருட்தந்தை
பிபின்
ஜூன் 29



அருட்தந்தை
பால்சன்
ஜூன் 29



## ஆயரின் மே மாத நிகழ்வுகள்



1 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மேரிமக்கள் கன்னியர் சமூகத்தின் மாகாண தினவிழா திருப்பலி நிறைவேற்றி அருட்கன்னியர் களுக்கு வாழ்த்துகளை பகிர்ந்தளித்தார்.

1 ➢ MBOC ஆசிரியர் பயிற்சியில் கலந்துகொண்டு மறைக்கல்வி ஆசிரியர்களை சந்தித்து கருத்துரை வழங்கினார்.

1 ➢ அடைக்காகுழி புனித சூசையப்பர் தோவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

2 ➢ செல்லங்கோணம் புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருவிழா கொடியேற்றி திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

3 ➢ திருவல்லா மறைமாவட்டம் பாயிப்பாடு தேவாலயத்தில் திருவிழா திருப்பலியாற்றி ஆசி வழங்கினார்.

3 ➢ சின்ன எடத்துவா தேவாலயத்தில் மறையுரை நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

4 ➢ பாத்திமாநகர் புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி ஆசி வழங்கினார்.

4 ➢ அணக்கரை புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

4 ➢ பூந்துறை தேவாலயத்தில் மறையுரை வழங்கி ஆசீர்வதித்தார் .

8 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டம் Care Home - க்கான அடிகல்லை அணக்கரையில் நாட்டினார்.

8 ➢ MCA சார்பாக நடத்தப்பட்ட Ignite - 2025 வகுப்பில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பல அறிவுரைகள் வழங்கினார்.

9 ➢ மார்த்தாண்டம் மேரி மக்கள் கன்னியர் சமூக அருட்சகோதரிகளில் மூன்று பேருக்கு நித்திய வார்த்தைப்பாடும், மூன்று அருட்சகோதரிகளுக்கு முதல் வார்த்தைப்பாடும் நல்கி ஆசி வழங்கினார்.

10 ➢ பாலா மறைமாவட்டத்தில் நடைபெற்ற துறவியர் சங்கத்தில் கலந்து கொண்டு ஆசிவழங்கினார்.

26 ➢ ஆதிச்சவிளாகத்தில் புதுமனை அர்ச்சித்து ஆசி வழங்கினார்.

27 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டதிற்காக இளநிலை பட்டமும், குருத்துவ அங்கியும் அளித்து குருமாணவர்களை ஆசீர்வதித்தார்.

30 ➢ காதோலிக்கேட் மையத்தில் வைத்து இறையியல் முதலாமாண்டு நுழையும் குருமாணவர்களுக்கு வகுப்பெடுத்தார்.

31 ➢ குழிஞ்ஞாம்விளையில் அருட்சகோதரி பிரசன்னா அவர்களுக்காக பொன்விழா வாழ்த்துக்களை பரிமாறினார் .

31 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டம் பொதுநிலையினர் தினத்தில் தலைமையேற்று ஆசியுரையாற்றினார்.

31 ➢ அருட்சகோதரி அல்பீனா அவர்களுக்கான நன்றித்திருப்பலியை உண்ணாமலக்கடை தேவாலயத்தில் நிறைவேற்றினார்.



## இம்மாதம் நினைவு கூர


ஜூன் 2025

1 – உயிர்ப்புக்குப்பின் ஆறாம் ஞாயிறு
சமூக தகவல் தொடர்பு தினம்
புனித ஜஸ்டின்
4 – கீவற்கீஸ் மார் திவன்னசியோஸ் ஆண்டகையின் நினைவு (2019)
5 – புனித போனிபஸ்
8 – பெந்தக்கோஸ்துத் திருநாள்
புனித மரிய தெரசாள்
11 – மார் பர்த்தலமேயு மற்றும் மார் பர்ணபாஸ்
மலங்கரை கத்தோக்க திரு ஆட்சி பீடம் நிறுவப்பட்ட நாள் (1932)
திருவனந்தபுரம் மறைமாநிலம் மற்றும்
திருவல்லா மறைமாவட்டம் உதயம் (1932)
13 – பதுவை நகரின் புனித அந்தோணியார்
14 – இறைவாக்கினர் எசா
15 – பெந்தக்கோஸ்துக்குப்பின் முதல் ஞாயிறு
தூய இறைஅன்னையின் பெயரில் முதல் தேவாலயம் நிறுவியதன் நினைவு
16 – திருத்தூதர் நோன்பு (பதிமூன்று நோன்பு தொடக்கம்)
18 – மார் எஃப்ரேம் மல்பான்
19 – திருத்தூதர் புனித யூதா ததேயு
21 – புனித அலோஷியஸ் கொன்சாகோ
22 – பெந்தக்கோஸ்துக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
24 – ஸ்நாபக யோவானின் பிறப்பு
சேப்பாட்டு பிப்போஸ் ரம்பானின் நினைவு
27 – யாக்கோபு மார் தியோஃபிலோஸ் ஆண்டகையின் நினைவு (1956)
28 – புனித ஐரேனியூஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ் ஆண்டகையின் பெயர்விழா
29 – பெந்தக்கோஸ்துக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
திருத்தூதர்களான மார் பேதுரு, மார் பவுல்
திருத்தூதர் நோன்பு நிறைவு
தூய மரியன்னை மலங்கரை குருத்துவக் கல்லூரி நிறுவப்பட்ட நாள் (1989)
குருமட தினம்
யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் மற்றும் யோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகையரின் ஆயர் திருநிலைப்பாடு (1998)
வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழா
30 – பன்னிரு திருத்தூதர்கள்

13


19


21


24


29


## MCA – பொதுநிலையினர் மாநாடு




## குருமட செய்திகள்



## Hom Special School



## முனைவர் பட்டம்பெற்ற குருக்களுக்கு வாழ்த்து



Rev. Fr. Dr. Darbellow Christus



Rev. Fr. Dr. Stephen Mathar

## புதிய ஆலயம், குருசடி அர்ச்சிப்பு



புனித பெனடிக்ட் ஆலயம், முக்கடல்



அன்னை வேளாங்கண்ணி ஆலயம், மத்தியாஸ் நகர்

## மறைமாவட்ட அறிவுரைக் குழுவின் மறைபரப்புத்தள சந்திப்பு



## MCA - Ignite Talent Exploration Programme



## மறைபரப்புத்தளச் செய்திகள்



## புதிய பணித்தளம் உருவாக்கம் – புன்னமூட்டுக்கடை



## DM Convent



Jubilee Inauguration



First & Final Profession



Congratulation Rev. Dr. Hanna DM

## நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் தியானம்



## Mids

